# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2016 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வேலையாளர்களின் வரவுசெலவுத் திட்ட நிவாரணப்படிச் சட்டம்*

---

*(2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2016, மாச்சு மாதம் 24 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *32.00*** **தபாற் செலவு : ரூபா *10.00***

**2016 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வேலையாளர்களின் வரவுசெலவுத் திட்ட நிவாரணப்படிச் சட்டம்**

[*2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ. 27/2015*

**வேலையாட்களுக்கு தொழில்தருநர்களால் வரவு செலவுத் திட்ட நிவாரணப்படியொன்றினைக் கொடுப்பனவு செய்வதற்காகவும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்காகவும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வேலையாளர்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப்படிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, ஆணையாளர் தலைமையதிபதி தகுதிவாய்ந்த அதிகாரியாக இருத்தல் வேண்டும். தகுதி வாய்ந்த அதிகாரி.

(2) தகுதிவாய்ந்த அதிகாரி, இச்சட்டத்தினால் அத்தகைய அதிகாரிக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, பணியை அல்லது கடமையைத் தொழில் திணைக்களத்தின் எவரேனும் அலுவலருக்குக் கையளிக்கலாம்.

**3.** (1) இரண்டாயிரத்துப் பதினைந்தாம் ஆண்டு மே 1ஆந்தேதியிலிருந்து பயனுறுவதாக, ஏதேனும் கைத்தொழிலிலுள்ள அல்லது சேவையிலுள்ள தொழில்தருநர் ஒவ்வொருவரும், ஒவ்வொரு மாதம் தொடர்பிலும், பின்வரும் அடிப்படையில் கணக்கிடப்பட்டதும், (இதனகத்துப்பின்னர் "படி" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதுமான) வரவுசெலவுத்திட்ட நிவாரணப்படியொன்றை தம்மால் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஒவ்வொரு வேலையாளுக்கும் கொடுப்பனவு செய்தல் வேண்டும்:- வரவு செலவுத் திட்ட நிவாரணப் படியின் கொடுப்பனவு.

(அ) எந்த வேலையாளின் மாதாந்த வேதனம் அல்லது சம்பளம் (இதனகத்துப்பின்னர் "இயைபான மாதம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2015 மே மாதம் நாற்ப

தாயிரம் ரூபாவாக அல்லது அதற்குக் குறைவாக வுள்ளதோ, அந்த வேலையாளின் விடயத்தில் கொடுப் பனவு செய்யப்படற்பாலதான படியானது ஆயிரத்து ஐந்நூறு ரூபாவாதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், வேலையாளொருவருக்கு வேலை வழங்குவதற்குத் தொழில்தருநர் தவறியமை தவிர்ந்த வேறேதேனும் காரணத்துக்காக, ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது தொழில் ஒப்பந் தத்தினால் விதித்துரைக்கப்பட்டவாறு ஒரு மாதத்தில் தேவைப்படுத்தப்பட்ட எண்ணிக்கையினவான நாட்க ளுக்கு வேலை செய்யாத அத்தகைய வேலையாளின் விடயத்தில், அத்தகைய மாதத்திற்கென அத்தகைய வேலையாளுக்குக் கொடுப்பனவு செய்யப்படற்பால தான படியானது, அத்தகைய மாதத்தின் போது அவர் வேலை செய்துள்ள எண்ணிக்கையினவான நாட்களுக் கான விகிதாசாரப்படி இருத்தல் வேண்டும்;

(ஆ) இயைபான மாதத்திற்கெனஎந்த வேலையாளுக்கு ஆயிரத்து அறுநூறு ரூபாவுக்கு விஞ்சாத நாளாந்த வீதம் கொடுப்பனவு செய்யப்படுகின்றதோ அந்த வேலையாளின் விடயத்தில், கொடுப்பனவு செய்யப் படற்பாலதான படியானது, அம்மாதத்தின் போது அவர் வேலை செய்துள்ள ஒவ்வொரு நாளுக்கும் நாளொன்றுக்கு அறுபது ரூபாவான பணத்தொகை யாகவிருத்தல் வேண்டும்;

(இ) துண்டு வீத அடிப்படையில் இயைபான மாதத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்ட வேலையாள் ஒருவரின் விடயத்தில், மாதமொன்று தொடர்பில் கொடுப்பனவு செய்யப்படற்பாலதான படியானது, அம்மாதத்துக்காக அத்தகைய வேலையாளுக்குக் கொடுப்பனவு செய்யப் படற்பாலதான மொத்த வேதனத்தின் அல்லது சம்பளத்தின் பதினைந்து சதவீதத்திற்குக் குறைவாக விருத்தலாகாது:

ஆயின், எவ்வாறாயினும், (அ), (ஆ) அல்லது (இ) என்னும் பந்தியின்கீழ் மாதமொன்றுக்குக் கொடுப்பனவு செய்யப்படற்பாலதான மொத்தப் படியானது ஆயிரத்து ஐந்நூறு ரூபாவை விஞ்சுதலாகாது;

(ஈ) எந்த வேலையாளின் இயைபான மாதத்திற்கான மாதாந்த வேதனம் அல்லது சம்பளம் நாற்பதாயிரம் ரூபாவை விஞ்சுவதுடன் நாற்பத்தோராயிரத்து ஐந்நூறு ரூபாவை விஞ்சாதுள்ளதோ அந்த வேலையாளின் விடயத்தில், கொடுப்பனவு செய்யப்படற்பாலதான படியானது நாற்பத்தோராயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கும் இயைபான மாதத்திற்கான வேதனம் அல்லது சம்பளத்தின் பணத்தொகைக்கும் இடையிலான வித்தியாசமாக இருத்தல் வேண்டும்;

(உ) இயைபான மாதத்திற்கென ஆயிரத்து அறுநூறு ரூபாவை விஞ்சியதும் ஆயிரத்து அறுநூற்று அறுபது ரூபாவை விஞ்சாததுமான நாளாந்த விகிதத்தில் கொடுப்பனவு செய்யப்படும் வேலையாள் ஒருவரின் விடயத்தில், கொடுப்பனவு செய்யப்படற்பாலதான நாளாந்த படியானது நாற்பத்தோராயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கும் இயைபான மாதத்திற்கான மொத்த வேதனத்திற்கும் இடையிலான வித்தியாசத்தின் இருபத்தைந்திலொரு பங்காக இருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஏதேனும் கைத்தொழிலிலுள்ள அல்லது சேவையிலுள்ள ஒவ்வொரு தொழில்தருநரும், 2016ஆம் ஆண்டு சனவரி 1ஆம் தேதியன்று தொடங்குகின்ற ஒவ்வொரு மாதம் தொடர்பிலும், அவரினால் தொழிலுக்கமர்த்தப்பட்ட (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வொரு வேலையாளுக்கும் பின்வரும் அடிப்படையில் கணக்கிடப்பட்ட படியொன்றைக் கொடுத்தல் வேண்டும்:-

(அ) எந்த வேலையாளின் இயைபான மாதத்திற்கென மாதாந்த வேதனம் அல்லது சம்பளம் நாற்பதாயிரம் ரூபாவாக அல்லது அதற்குக் குறைவாகவுள்ளதோ அந்த வேலையாளின் விடயத்தில், கொடுக்கப்படற்பால தான படியானது ஆயிரம் ரூபாவாதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், வேலையாளொருவருக்கு வேலை வழங்குவதற்குத் தொழில்தருநர் தவறியமை தவிர்ந்த வேறேதேனும் காரணத்துக்காக, ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது தொழில் ஒப்பந் தத்தினால் விதித்துரைக்கப்பட்டவாறு தேவைப்படுத் தப்பட்ட எண்ணிக்கையினவான நாட்களுக்கு வேலை செய்யாத அத்தகைய வேலையாளின் விடயத்தில், அத்தகைய மாதத்திற்கென அத்தகைய வேலையாளுக் குக் கொடுப்பனவு செய்யப்படற்பாலதான படியானது, அத்தகைய மாதத்தின் போது அவர் வேலை செய் துள்ள எண்ணிக்கையினவான நாட்களுக்கான விகிதா சாரப்படி இருத்தல் வேண்டும்;

(ஆ) எந்த வேலையாளுக்கு இயைபான மாதத்திற்கென ஆயிரத்து அறுநூறு ரூபாவை விஞ்சாத நாளாந்த வீதம் கொடுப்பனவு செய்யப்படுகின்றதோ அந்த வேலை யாளின் விடயத்தில், கொடுப்பனவு செய்யப்படற் பாலதான படியானது, அம்மாதத்தின் போது அவர் வேலை செய்துள்ள ஒவ்வொரு நாளுக்கும் நாளொன் றுக்கு நாற்பது ரூபாவான பணத்தொகையாக விருத்தல் வேண்டும்;

(இ) துண்டு வீத அடிப்படையில் இயைபான மாதத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்ட வேலையாள் ஒருவரின் விடயத்தில், மாதமொன்று தொடர்பில் கொடுப்பனவு செய்யப்படற்பாலதான படியானது, அம்மாதத்துக்காக அத்தகைய வேலையாளுக்கு கொடுப்பனவு செய்யப் படற்பாலதான வேதனத்தின் அல்லது சம்பளத்தின் பத்து சதவீதத்திற்குக் குறைவாகவிருத்தலாகாது:

ஆயின், எவ்வாறாயினும், (அ), (ஆ) மற்றும் (இ) பந்திகளின்கீழ் மாதமொன்றுக்குக் கொடுப்பனவு செய்யப்படற்பாலதான மொத்தப் படியானது ஆயிரம் ரூபாவை விஞ்சுதலாகாது.

(3)(அ) விடயத்துக்கேற்ப, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (1) ஆம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளின் கீழ், கொடுப்பனவு செய்யப்படற்பாலதான படியானது, மாதமொன்றிற்கென வேலையாளொருவருக்கு மொத்த வேதனம் அல்லது சம்பளம் நாற்பத்தோராயிரத்து ஐந்நூறு ரூபா என்ற அதிகபட்ச வரையறைக்கு அமைந்ததாக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) ஐயத்தை தவிர்ப்பதற்கென, (1) ஆம் உட்பிரிவின் (ஈ) மற்றும் (உ) என்னும் பந்தியின்கீழ் படியைப் பெற்றுள்ள எவரேனும் வேலையாள் (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் படிக்கு உரித்துடையவராதலாகாது என பிரகடனம் செய்யப்படுகின்றது.

(4) இரண்டாயிரத்துப் பதின்நான்காம் ஆண்டு ஒக்டோபர் 1 ஆந் தேதிக்கும் 2015 ஆம் ஆண்டு ஏப்பிரல் 30 ஆம் தேதிக்குமிடையேயான காலப்பகுதியின் போது, தம்மால் தொழிலுக்கமர்த்தப்பட்ட வேலையாட்களின் வேதனத்தை அல்லது சம்பளத்தை அதிகரித்துள்ள ஏதேனும் கைத்தொழிலிலுள்ள அல்லது சேவையிலுள்ள தொழில்தருநரொருவர், ஒன்றாகக் கூட்டப்படும் அத்தகைய அதிகரிப்புக்கள் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின் கீழ் அல்லது (1) ஆம் உட்பிரிவின் கீழும் (2) ஆம் உட்பிரிவின் கீழும் அதிகரிக்கப்படவேண்டிய தொகையை விஞ்சினால், அத்தகைய தொழில்தருநர், விடயத்துக்கேற்ப, (1) ஆம் உட்பிரிவின் அல்லது (1)ஆம் உட்பிரிவு மற்றும் (2)ஆம் உட்பிரிவு ஆகிய இரண்டினதும் ஏற்புடைமையிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(5) இரண்டாயிரத்துப் பதின்நான்காம் ஆண்டு ஒக்டோபர் 1ஆந்தேதிக்கும் 2015ஆம் ஆண்டு ஏப்ரல் 30ஆந்தேதிக்கும் இடையேயான காலப்பகுதியின் போது, ஆயிரத்து ஐந்நூறு

ரூபாவுக்குக் குறைவாகவுள்ள பணத்தொகையிலான வேதன அல்லது சம்பள அதிகரிப்பொன்றைப் பெற்றுள்ள வேலையா ளொருவர், ஆயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கும் அத்தகைய வேதன அல்லது சம்பள அதிகரிப்புத்தொகைக்கும் இடையேயான வித்தியாசத்துக்குச் சமமாகவுள்ளதும் (1)ஆம் உட்பிரிவின் கீழானதுமான படியொன்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(6) இரண்டாயிரத்துப் பதின்நான்காம் ஆண்டு ஒக்டோபர் 1 ஆந் தேதிக்கும் மற்றும் 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆந் தேதிக்கும் இடையேயான காலப்பகுதியின் போது, ஆயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கு மேற்பட்டதும் மற்றும் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவுக்குக் குறைவானதுமான பணத்தொகையிலான வேதன அல்லது சம்பள அதிகரிப்பொன்றை பெற்றுள்ள வேலையாளொருவர், இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கும் அத்தகைய வேதன அல்லது சம்பள அதிகரிப்புத் தொகைக்கும் இடையேயான வித்தியாசத்துக்குச் சமமாகவுள்ளதும் (2) ஆம் உட்பிரிவின் கீழானதுமான படியொன்றுக்கு உரித்துடையவ ராதல் வேண்டும்.

(7) (அ) இச்சட்டம் நடைமுறைக்குவருகின்ற தேதியன்று வலுவிலுள்ளதும், வேதன அதிகரிப்புத் தொடர்பான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளதும், (131 ஆம் அத்தி யாயமான) கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின்கீழ் செய்துகொள்ளப்பட்டதுமான கூட்டு உடன்படிக்கை யினால்; அல்லது

(ஆ) அத்தகைய வேலையாள் தொடர்பில் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட கூட்டு உடன்படிக்கை யொன்றின் ஏற்புடைமையை நீடிக்கின்றதும், கைத் தொழிற் பிணக்குகள் சட்டத்தின் 10ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் கீழானதுமான கட்டளையொன்றி னால்,

ஆளப்பட்ட அத்தகைய வேலையாள், (1)ஆம் உட்பிரிவின் கீழான அல்லது (2) ஆம் உட்பிரிவின் கீழான படிக்கு உரித்துடையவ ராதலாகாது.

(8) (அ) இரண்டாயிரத்து ஆறாம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கருத்தெல்லையினுள் ஏதேனும் தரும நோக்க நிறுவனத்தினால்; அல்லது

(ஆ) மதவழிபாட்டிற்கென பேணப்படும் அல்லது மதவழி பாட்டுடன் தொடர்புபட்ட ஏதேனும் மதசார் நிறு வனங்களினால்,

தொழிலுக்கமர்த்தப்பட்ட வேலையாளொருவர் இச்சட்டத்தின் கீழான படிக்கு உரித்துடையவராதலாகாது.

இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக,"மதசார் நிறுவனம்" என்பது ஏதேனும் கோயில், கோவில், தேவாலயம், பள்ளிவாசல் அல்லது வேறு அதையொத்த நிறுவனம் எனப் பொருளாவ துடன், மதவழிபாட்டின் நோக்கத்திற்கென அல்லது தொடர்பு பட்ட அத்தகைய கோயில், கோவில், தேவாலயம் அல்லது பள்ளி வாசலினால் சொந்தமாகக் கொண்டு பேணப்படும் ஏதேனும் நிறுவனத்தையும் உள்ளடக்கும்.

(9)அமைச்சர், ஏதேனும் கைத்தொழில் அல்லது சேவை தொடர்பாக நிலவுகின்ற இயைபான குறைவடைந்துவருகின்ற பொருளாதார நிலைமைகளைக் கவனத்திற்கொண்டு, கைத்தொழில் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின தும் பொருளாதார அலுவல்கள் என்னும் விடயம் குறித்தளிக்கப் பட்ட அமைச்சரினதும் கலந்தாலோசனையுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம், அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் கைத்தொழில் அல்லது சேவை தொடர்பாக இப்பிரிவின் ஏற்பாடுகளினது நடைமுறையை அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதிக் குப் பிற்போடலாம்:

ஆயின், இவ்வுட்பிரிவின் நியதிகளின்படியான ஏதேனும் பிற்போடுதல் அத்தகைய கட்டளை ஆக்கப்பட்ட தேதியிலிருந்து பன்னிரண்டு மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு அப்பால் நீடித்தலாகாது.

(10) நான்காம், (5)ஆம் மற்றும் (6)ஆம் உட்பிரிவுகளின் நோக்கங்களுக்காக "வேதன அல்லது சம்பள அதிகரிப்பு" என்னும் சொல்லமைப்பு இச்சட்டத்தின்கீழ் வரவு செலவுத்திட்ட நிவாரணப்படியுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் வேதன அல்லது சம்பள அதிகரிப்பு என்று பொருளாகும், ஆனால் ஒரு வேலை

யாளுக்குக் கொடுக்கப்பட்ட எவையேனும் வருடாந்த அல்லது காலாகால அதிகரிப்புக்களை அல்லது ஒரு வேலையாள் எந்த அதிகரிப்புக்கு உரித்துடையவராகவுள்ளாரோ அந்த அதிகரிப்பை உள்ளடக்காது:

ஆயின் எவ்வாறாயினும், 2014 ஆம் ஆண்டு ஒக்டோபர் 1 ஆந் திகதியில் தொடங்குகின்றதும் 2015 ஆம் ஆண்டு ஏப்பிரல் 30 ஆந் திகதியில் முடிவடைகின்றதுமான காலப்பகுதியினுள் இச்சட்டத்தின் கீழான படிக்கு தொடர்புபட்ட அதிகரிப்புத் தன்மையிலுள்ள எவரேனும் தொழில்தருநரால் வேலையாளுக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட ஏதேனும் அதிகரிப்பு, இப்பிரிவின் நோக்கத்திற்கு வேதன அல்லது சம்பளத்தின் பாகமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

தொழில் தொடர்ந்துறுதல் தொடர்பான விசேட ஏற்பாடுகள்.

**4**. மூன்றாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக இயைபான மாதத்தில் எவரேனும் தொழில்தருநரினால் தொழிலுக்கமர்த்தப் பட்டுள்ள ஒவ்வொரு வேலையாளும், அவர் அத்தகைய தொழில்தருநரின் வேலையாளாகத் தொடர்ந்திருக்கும்வரை, இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று அத்தகைய வேலையாள் அனுபவித்து வந்த வேதனம் அல்லது சம்பளம், படிகள் அல்லது வேறு பணவகையான கொடுப்பனவு களிலும் பார்க்கக் குறைவான அனுகூலமுடையனவாக விராதவையும், எத்தகையதுமான எப்பெயர் கொண்டும் அல்லது விவரணப்பெயர் கொண்டும் அழைக்கப்பட்டவையுமான, வேதனம் அல்லது சம்பளம், படிகள் அல்லது வேறுவகையான பணக்கொடுப்பனவுகள் தொடர்பான அத்தகைய நியதிநிபந் தனைகளின் மீது அவ்வாறு தொடர்ந்தும் தொழிலுக்கமர்த் தப்படுதல் வேண்டும்.

இடாப்பைப் பேணுவதற்கான தொழில் தருநரின் கடமை.

**5**. (1) ஏதேனும் கைத்தொழிலிலுள்ள அல்லது சேவையிலுள்ள வேலையாளொருவரின் தொழில்தருநர், இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதியிலிருந்தும் அதன்பின்னரும், பின்வருவனவற்றை எடுத்துக்காட்டுகின்ற இடாப்பொன்றை அக்கைத்தொழில் அல்லது சேவை கொண்டு நடாத்தப்படுகின்ற வளவுகளில் பேணிவருதலும் வைத்திருத்தலும் வேண்டும்:-

(அ) அவரினால் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள வேலையாள் ஒவ்வொருவரினதும் பெயர்;

(ஆ) அவரினால் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள வேலையாள் ஒவ்வொருவரினாலும் புரியப்படும் வேலையின் வகுப்பு; அத்துடன்

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, படியாக அத்த கைய ஒவ்வொரு வேலையாளுக்கும் கொடுக்கப்பட்ட தொகை.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் பேணிவரப்பட்ட ஒவ்வோர் இடாப்பும் தொழில்தருநரினால் ஆறு ஆண்டுக் காலப்பகுதி யொன்றுக்குப் பேணிக்காக்கப்படுதல் வேண்டும். தொழில்தருநர் ஒவ்வொருவரும், ஆணையாளர் தலைமையதிபதியினால் தேவைப்படுத்தப்படும்போது, சோதனைக்காக அத்தகைய இடாப் பைக் காண்பித்தல் வேண்டும் அல்லது அதன் உண்மையான பிரதியொன்றைக் கொடுத்துதவுதல் வேண்டும் அல்லது அத்தகைய இடாப்பின் பிரதியொன்று எடுக்கப்படுவதற்கு அனு மதித்தல் வேண்டும்.

(3) ஏதேனும் கைத்தொழிலில் அல்லது சேவையில் உள்ள எவரேனும் வேலையாளின் தொழில்தருநர் (1) ஆம் உட்பிரி வின்கீழ் வைத்திருக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட இடாப்பை அக்கைத்தொழில் அல்லது சேவை கொண்டு நடாத் தப்படுகின்ற வளவுகளில் பேணிவருவதற்கும் வைத்திருப்பதற்கும் தவறியுள்ளவிடத்து அல்லது சோதனைக்காக அத்தகைய இடாப்பைக் காண்பிக்கும்படி (2)ஆம் உட்பிரிவின்கீழ் தேவைப் படுத்தப்படும் போது அவ்வாறு செய்வதற்குத் தவறுமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி, அவருக்குக் கிடைக்கக்கூடிய வாய்மொழிமூலமான மற்றும் ஆவணமுறையான எல்லாச் சான்றுகளினதும் அடிப்படையில் இச்சட்டத்தின்கீழ் அத்தகைய வேலையாளுக்குக் கொடுக்கப்படற்பாலதான, விடயத்துக்கேற்ப, படியை அல்லது படிகளின் குறைக் கொடுப்பனவை மதிப்பீடு

செய்வதற்கு இத்தால் தத்துவமளிக்கப்படுகின்றாரென்பதுடன், அத்தகைய ஏதேனும் படியின் கொடுப்பனவில் தவறுகைபுரியப் படுமிடத்து, 11ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

*தகுதி வாய்ந்த அதிகாரியின் தத்துவங்கள்.*

**6**. தகுதிவாய்ந்த அதிகாரி பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) ஏதேனும் இடாப்பைப் பரிசோதனை செய்யும் அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்படுகின்றனவா என்பதை நிச்சயிக்கும் நோக்கத்துக்காக, ஏதேனும் கைத்தொழிலிலுள்ள அல்லது சேவையிலுள்ள வேலையாட்கள் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள ஏதேனும் இடத்தினுள் பகலிலோ அல்லது இரவிலோ நியாயமான எல்லா நேரங்களிலும் பிரவேசிப்பதற்கும் அதனைச் சோதனை செய்வதற்கும்;

(ஆ) அவர் அத்தகைய இடத்தை சோதனை செய்யும் போது அத்தகைய இடாப்பெதுவும் பரிசோதனைக்காகக் கிடைக்காதவிடத்து, குறித்துரைக்கப்பட்ட ஒரு பின்னைய தேதியில் பரிசோதனைக்காக அத்தகைய இடத்தில் அல்லது அத்தகைய அதிகாரியின் அலுவலகத்தில் அத்தகைய இடாப்பைக் காண்பிக்கும்படி தேவைப்படுத்துவதற்கும்;

(இ) அத்தகைய ஏதேனும் இடாப்பின் முழுமையினதும் அல்லது அதன் ஏதேனும் பகுதியினதும் பிரதிகளை எடுப்பதற்கும்;

(ஈ) அத்தகைய இடத்தில் காணப்படுகின்றவரும் அத்தகைய இடத்தில் கொண்டுநடாத்தப்படுகின்ற ஏதேனும் கைத்தொழிலில் அல்லது சேவையில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள வேலையாட்களின் தொழில்தருநரொருவரென நம்புவதற்கு அவருக்கு நியாயமான காரணமுள்ளவருமான எவரேனுமாளை வினாவுவதற்கும்; அல்லது

(உ) ஏதேனும் கைத்தொழிலில் அல்லது சேவையில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள வேலையாட்களின் எவரேனும் தொழில்தருநரை, குறித்துரைக்கப்பட்டவொரு தேதியன்று அல்லது அதற்குமுன்னர்-

(i) அத்தகைய வேலையாட்களின் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வகுப்பில் அல்லது விவரணத்தில் அத்தகைய எவரேனும் தொழில்தருநரினால் தொழிலுக்கமர்த்தப்பட்ட எல்லா வேலையாட்களும் தொடர்பானதும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அவர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய வேறு விபரங்களைக் கொண்டுள்ளதுமான விபரத்திரட்டொன்றை;

(ii) அத்தகைய எவரேனும் தொழில்தருநரினால் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விபரத்திரட்டில் கூறப்பட்ட விபரங்கள் தொடர்பில் அவர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய தகவலை அல்லது விளக்கத்தை; அல்லது

(iii) அத்தகைய எவரேனும் தொழில்தருநரினால் பேணிவரப்பட்ட ஏதேனும் இடாப்பில் முழுமையினதும் அல்லது அதன் ஏதேனும் பகுதியினதும் உண்மையான பிரதியை,

அவருக்குக் கொடுத்துதவும்படி எழுத்தில் பணிப்பதற்கும்.

தவறுகளும் தண்டங்களும்.

**7.** (1) இச்சட்டத்தின் 3ஆம் பிரிவின் அல்லது 4ஆம் பிரிவின் அல்லது 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்றவரான, ஏதேனும் கைத்தொழிலிலுள்ள அல்லது சேவையிலுள்ள எவரேனும் தொழில்தருநர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவரால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) (அ) ஆறாம் பிரிவின் கீழான ஏதேனும் உட்பிரவேசத் துக்கு அல்லது சோதனைக்கு அல்லது தகுதிவாய்ந்த அதிகாரி அவரின் தத்துவங்களைப் பிரயோகிப்ப தற்கு அவசியமானவாறான அத்தகைய உதவியை அவருக்குக் கொடுத்துதவுவதற்குத் தவறுகின்ற;

(ஆ) அப்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிப்பதில் அத்தகைய அதிகாரியைத் தடங்கல் செய்கின்ற அல்லது அவருக்கு முட்டுக்கட்டையிடு கின்ற;

(இ) காண்பிக்கும்படி அல்லது கொடுத்துதவும்படி அத்தகைய அதிகாரி அவரைத் தேவைப்படுத்து கின்ற ஏதேனும் இடாப்பைக் காண்பிப்பதற்கு அல்லது ஏதேனும் தகவலைக் கொடுத்துதவுவதற்கு மறுக்கின்ற;

(ஈ) ஏதேனும் பொய்யான கூற்றை ஏதேனும் இடாப்பில் எழுதுகின்ற அல்லது எழுதச் செய்கின்ற அல்லது பொய்யான கூற்றொன்றை அத்தகைய அதிகாரிக்கு அளிக்கின்ற அல்லது பொய்யான கூற்றொன்றைக் கொண்டுள்ள ஏதேனும் இடாப்பை, அது பொய்யான தென அறிந்துகொண்டே அத்தகைய அதிகாரிக்குக் காண்பிக்கச் செய்கின்ற அல்லது அறிந்துகொண்டே காண்பிப்பதற்கு அனுமதிக்கின்ற;

(உ) அப்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் செயலாற்றுகின்ற அத்தகைய அதிகாரிக்கு ஏதேனும் தகவலை, அது பொய்யானதென அறிந்துகொண்டே கொடுத்துதவுகின்ற; அல்லது

(ஊ) ஆறாம் உட்பிரிவின்கீழ் அத்தகைய அதிகாரியினால் விடுக்கப்பட்ட எவையேனும் பணிப்புக்களுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது அப்பிரி வின் கீழான விபரத்திரட்டொன்றைக் கொடுத்து

தவும்படி கோரப்பட்டபோது ஏதேனும் பொய்யான கூற்றைக் கொண்டுள்ள விபரத்திரட்டொன்றை அறிந்துகொண்டே கொடுக்கின்ற அல்லது கொடுத்துதவுகின்ற அல்லது கொடுக்கப்படுவதனை அல்லது கொடுத்துதவப்படுவதனைச் செய்விக்கின்ற,

எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

*ஆட்கள் குழுவினால் புரியப்பட்ட தவறுகளுக்காகப் பணிப்பாளர்களினதும் குறித்த சில அலுவலர்களினதும் பொறுப்பு.*

**8**. இச்சட்டத்தின் கீழான தவறொன்று ஓர் ஆட்கள் குழுவினால் புரியப்படுமிடத்து, அப்போது-

(அ) அவ்வாட்கள் குழு ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாக விருப்பின், அத்தவறு புரியப்பட்ட நேரத்தில் அக்குழுவின் பணிப்பாளர், பொது முகாமையாளர், முகவர், செயலாளர் அல்லது ஒத்த பதவியை வகிக்கின்ற அலுவலர் என்போராகவிருந்த ஆள் ஒவ்வொருவரும்;

(ஆ) அவ்வாட்கள் குழு ஒரு குழுமமாகவிருப்பின், அக்குழுமத்தின் பங்காளர் ஒவ்வொருவரும்; அல்லது

(இ) அவ்வாட்கள் குழு ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாக இராதிருப்பின், அத்தவறு புரியப்பட்ட நேரத்தில் அக்குழுவின் உறுப்பினராகவிருந்த ஆள் ஒவ்வொருவரும்,

அத்தவறு தமது சம்மதமோ அல்லது மறைமுக ஆதரவோ இல்லாமல் புரியப்பட்டதென்றும், தமது பணிகளின் தன்மையையும் தொடர்புபட்ட சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு அத்தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்குப் பிரயோகித்திருக்க வேண்டிய அத்தகைய எல்லா விழிப்புக்கவனத்தையும் தாம் பிரயோகித்தாரென்றும் அவர் எண்பித்தாலொழிய, அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழ் போகுமதியான கொடுப்பனவு, வேலையாளொருவரினது வேதனத்தின் அல்லது சம்பளத்தின் பாகமாகவமைதல்.

**9**. இச்சட்டத்தின் கீழ் வேலையாளொருவருக்குக் கொடுப்பனவு செய்யப்படற்பாலதான படியானது, எல்லா நோக்கங்களுக்காகவும் -

(அ) ஊழியர் சகாய நிதியத்துக்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்கும், ஓய்வூதியத்துக்குமான, உதவு தொகைகள்;

(ஆ) வருடாந்த விடுமுறை அல்லது லீவுக்கான வேதனம் அல்லது சம்பளம்;

(இ) மேலதிக நேர வேலை ஊதியம்;

(ஈ) மகப்பேற்று நன்மைக் கொடுப்பனவு; அத்துடன்

(உ) பணிக்கொடை,

என்பவற்றை உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வேலையாளினது வேதனத்தின் அல்லது சம்பளத்தின் பாகமாகவமைதலும் வேண்டும். அத்தகைய எவரேனும் வேலையாளின் தொழில்தருநர் ஒவ்வொருவரும், அத்தகைய வேலையாளின் வேதனத்தை அல்லது சம்பளத்தை எக்காலப்பகுதியினுட் கொடுப்பதற்கு ஏதேனும் இயைபான எழுத்திலான சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுகின்றாரோ அக்காலப்பகுதியினுள் அத்தகைய தொழில்தருநர் அத்தகைய படியைக் கொடுப்பனவு செய்தல் வேண்டும்.

*வேலையாட்களுக்குப் போகுமதியான பணத் தொகைகளைக் கொடுப்பனவு செய்யத் தவறுதல்.*

**10.** (1) இச்சட்டத்தின்கீழ் வேலையாளொருவருக்குக் கொடுப்பனவு செய்யப்படுவதற்கு தேவைப்படுத்தப்பட்ட படியைக் கொடுப்பனவு செய்யத்தவறுகின்ற எவரேனும் தொழில்தருநர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவரால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் கீழ் வேலையாளொருவருக்குக் கொடுப்பனவு செய்வதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் பணத்தொகையைக் கொடுப்பனவு செய்யத் தவறியமைக்காகத் தொழில்தருநரொருவருக்கு நீதிவானொருவரினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், நீதிமன்றமானது, அத்தகைய தவறுக்காக விதிக்கப்பட்ட தண்டத்துடன் சேர்த்து மேலதிகமாக, கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றினுள் அத்தகைய பணத்தொகையை அத்தகைய வேலையாளுக்குக் கொடுப்பனவு செய்யும்படி அத்தகைய தொழில்தருநருக்குக் கட்டளையிடுதல் வேண்டுமென்பதுடன், அப்பணத்தொகை அவ்வாறு செலுத்தப்படாவிடின், அத்தகைய பணத்தொகையானது, அது நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்று என்றாற்போன்று நீதிமன்றக்கட்டளை மூலம் அறவிடப்படுதலும் அத்தகைய வேலையாளுக்குக் கொடுப்பனவு செய்யப்படுதலும் வேண்டும்.

*படியின் கொடுப்பனவில் தவறுகை புரியப்படுகின்றமைக்கெதிரான வழக்கு.*

**11.** (1) எவரேனும் வேலையாளுக்கு அல்லது வேலையாட்களுக்குக் கொடுப்பனவு செய்யப்படற்பாலதான படியைக் கொடுப்பனவு செய்வதில் எவரேனும் தொழில்தருநர் தவறுகை புரியுமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி, அவசியமென அவர் கருதுகின்றவாறான அத்தகைய நுண்ணாய்வின்பின்னர், தொழில்தருநர் அத்தகைய வேலையாளுக்கு அல்லது வேலையாட்களுக்குப் படியைக் கொடுப்பனவு செய்வதில் தவறுகை புரிந்துள்ளாரெனத் திருப்திப்படின், அத்தகைய தொழில்தரு

நருக்கு வழங்கப்படும் அறிவித்தல்மூலம், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதியினுள், அத்தகைய வேலையாள் அல்லது வேலையாட்கள் தொடர்பில் தவறுகையிலுள்ள படியின் தொகையை, அத்தொகை போகுமதியாகவுள்ள காலப்பகுதிக்காக தம்மிடம் வைப்பிலிடுமாறு தேவைப்படுத்தல் வேண்டும்.

(2) தொழில்தருநர் (1) ஆம் உட்பிரிவின் கீழான அத்தகைய அறிவித்தலைப் பெற்றதன்மேல், அவ்வறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது அத்தேதிக்கு முன்னர் அறிவித்தலிற் சுட்டிக்காட்டப்பட்ட தொகையை ஆணையாளர் தலைமையதிபதியிடம் வைப்பிலிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அறிவித்தல் பெறப்பட்டபின்னர் தொழில்தருநரினால் செய்யப்பட்ட வேலையாளுக்கான அல்லது வேலையாட்களுக்கான படியின் ஏதேனும் கொடுப்பனவு, தவறுகையிலுள்ள படியின் செல்லுபடியான கொடுப்பனவாகவிருப்பதாகக் கருதப்படுதலுமாகாது.

(3) தொழில்தருநரொருவர் இச்சட்டத்தின்கீழ் வரவுசெலவுத் திட்ட நிவாரணப்படியாக அவர் செலுத்துவதற்கு ஆளாகவுள்ள ஏதேனும் பணத்தொகையைச் செலுத்துவதில் தவறுகைபுரிந்து (2)ஆம் உட்பிரிவை மீறுமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி, அவ்வாறு போகுமதியான பணத்தொகையின் விபரங்களையும் தவறுகைபுரிந்த தொழில்தருநரின் பெயரையும் வதிவிடத்தையும் கொண்டுள்ளதுமான சான்றிதழொன்றை, எந்த வேலையாள் அல்லது வேலையாளர்கள் தொடர்பில் தவறுகைபுரியப்பட்டுள்ளதோ அந்த வேலையாளின் அல்லது வேலையாளர்களின் தொழிலிடம் அமைந்துள்ள பிரிவில் நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவானுக்கு வழங்குதல் வேண்டும். நீதிவான் அதன்மேல், இச்சட்டத்தின்கீழ் போகுமதியான பணத்தொகையை அறவிடுவதற்காக அவருக்கெதிராக ஏன் மேலதிக வழக்கு நடவடிக்கைகள் எடுக்கப்படலாகாதெனக் காரணங்காட்டும்படி அத்தகைய தொழில்தருநரைத் தம்முன்னர் தோன்றுமாறு கட்டளைவிட்டழைத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அழைப்புக்கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட நாளன்று அத்தகைய தொழில்தருநர்,

விடயத்துக்கேற்ப, நீதிமன்றத்தின் முன்னர் தோன்றத்தவறு வாராயின் அல்லது போதிய காரணம் காட்டப்படாதுவிடின், அத்தகைய பணத்தொகை மறியற்றண்டனையினால் தண்டிக்கப் படற்பாலதான தவறொன்றுக்காக அத்தகைய தொழில்தருநர்மீது நீதிவானின் தண்டனைத்தீர்ப்பின்மூலம் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகையவொரு தவறுக்காக விதிக்கப்பட்ட குற்றப்பணத்தின் கொடுப்பனவிலான தவறுகை தொடர்பாக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 291 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் [(1) ஆம் உட்பிரிவின் (அ), (ஈ) மற்றும் (ஐ) என்னும் பந்திகள் தவிர] அதன்மேல் ஏற்புடையனவாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான், அப்பிரி வின் ஏற்பாடுகளின் மூலம் அத்தகைய தண்டனைத்தீர்ப்பை அவர் விதிக்கும் நேரத்தில் விடுத்திருக்கக்கூடியவாறான ஏதே னும் பணிப்பையும் விடுக்கலாம்.

(4) இப்பிரிவின் நோக்கத்துக்காக ஆணையாளர் தலைமையதி பதியினால் வழங்கப்பட்ட சான்றிதழிலுள்ள ஏதேனும் கூற்றின் சரியானதன்மை பற்றி இப்பிரிவின்கீழான எவையேனும் வழக்குநடவடிக்கைகளில் நீதிமன்றத்தினால் கேள்விக்குட் படுத்தப்படுதலோ அல்லது விசாரணை செய்யப்படுதலோ ஆகாது என்பதுடன், அதற்கிணங்க அத்தகைய சான்றிதழிலுள்ள ஏதேனும் கூற்று, தவறுகை புரிகின்ற தொழில்தருநரிடமிருந்து இச்சட்டத்தின்கீழ் போகுமதியான தொகை முறையாக கணக்கிடப் பட்டுள்ளமை மற்றும் அத்தகைய தொகை தவறுகையிலுள்ளமை என்ற நிகழ்வுகளுக்குப் போதிய சான்றாதலும் வேண்டும்.

(5) எவரேனும் தொழில்தருநர் இச்சட்டத்தின்கீழ் கொடுப் பனவு செய்வதற்கு ஆளாகவுள்ள ஏதேனும் பணத்தொகையைக் கொடுப்பனவு செய்யத் தவறியமைக்காக இப்பிரிவின்கீழ் அவருக்கெதிரான எவையேனும் வழக்குநடவடிக்கைகளில், அப்பணத்தொகை செலுத்தப்பட்டதென்பதை எண்பிப்பதற்கான பொறுப்பு அத்தொழில்தருநரைச் சார்ந்ததாதல் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழான தவறுகளுக் காகக் குற்ற வழக்குத் தொடுப்பதற்கு அவசியமான நிபந்தனைகள்.

**12**. இச்சட்டத்தின்கீழ்ப் புரியப்பட்ட ஏதேனும் தவறுக்கான குற்றவழக்கெதுவும், ஆணையாளர் தலைமையதிபதியினாலன்றி அல்லது அவரின் எழுத்திலான முன்னனுமதியுடனன்றி, தொடுக்கப்படலாகாது.

கடந்த காலப் பயன்.

**13**. (1) இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவானது, எல்லா நோக்கங் களுக்கும் 2015 ஆம் ஆண்டு மே 1 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வந்திருப்பதாக கருதப்படுதல் வேண்டும்.

(2) இரண்டாயிரத்துப் பதினைந்தாம் ஆண்டு மே 1 ஆந் திகதி தொடங்குகின்றதும் இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற திகதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதிக்கென இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) அல்லது (2) ஆம் உட்பிரிவுகளின் கீழ் எவரேனும் வேலையாளுக்கு எவரேனும் தொழில்தருநரால் கொடுப்பனவு செய்யப்படற்பாலதான படியின் ஏதேனும் கொடுப்பனவு செய்யப்படாத தொகை இச்சட்டம் தொடங்கும் திகதியில் காணப்படுமிடத்தும், அத்துடன் அத்தகைய தொழில்தருநர் இச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதியிலிருந்து தொடங்கும் பன்னிரண்டு மாத காலப்பகுதியினுள் சமமான மாதாந்த தவணைக் கட்டணங்களில் அல்லது உயரிய மாதாந்த தவணைக் கட்டணங்களில் படியின் அத்தகைய சென்மதிகளை அத்தகைய வேலையாளுக்குச் செலுத்துகின்றவிடத்தும், அத்தகைய தொழில்தருநர் எல்லா நோக்கங்களுக்காகவும் இச்சட்டத்தின் விடயத்துக்கேற்ப, 3 ஆம் பிரிவின் (1) ஆம் அல்லது (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகியிருப்பதாக கருதப்படுதல் வேண்டும்.

பொருள் கோடல்.

**14**. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலொழிய-

"கூட்டு உடன்படிக்கை" என்பது, (131 ஆம் அத்தியாயமான) கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"ஆணையாளர் தலைமையதிபதி" என்பது, தொழில் ஆணையாளர் தலைமையதிபதி என்ற பதவியை அப்போதைக்கு வகிக்கின்ற ஆள் என்று பொருளாகும் என்பதுடன், ஒரு மேலதிக ஆணையாளர் தலைமையதிபதியாக, தொழில் ஆணையாளராக, பிரதித் தொழில் ஆணையாளராக அல்லது உதவித் தொழில் ஆணையாளராக அல்லது ஒரு தொழில் அலுவலராக அப்போதைக்குப் பதவிவகிக்கின்ற எவரேனுமாளையும் உள்ளடக்கும்;

"தொழில்தருநர்" என்பது, எந்த ஆள் எவரேனும் வேலையாளைத் தொழிலுக்கமர்த்துகின்றாரோ எவரேனுமாள் அல்லது எந்த ஆளின் சார்பில் வேறெவரேனுமாள் எவரேனும் வேலையாளைத் தொழிலுக்கமர்த்துகின்றாரோ அந்த எவரேனுமாள் என்று பொருளாகும் என்பதுடன், தொழில்தருநர்களின் குழுவொன்றையும் (அத்தகைய குழு ஒரு குழுமமாக, கம்பெனியாக, உள்ளூரதிகாரசபையாக அல்லது தொழிற்சங்கமாக இருப்பினுஞ்சரி), வேறெவரேனுமாளின் சார்பில் எவரேனும் வேலையாளைத் தொழிலுக்கமர்த்துகின்றவரான, ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அரசாங்கத்துக்குரித்தாக்கப்பட்ட தொழிற் பொறுப்பு முயற்சியொன்றின் தகுதிவாய்ந்த அதிகாரியும், சட்டமரபுரிமையாளரும், சட்டத்தில் அடுத்துறுபவரும், நிறைவேற்றுநரும் அல்லது நிருவாகியும் ஒரு கம்பெனியின் ஒழித்துக்கட்டுநரும், கூட்டிணைக்கப்படாத குழுவொன்றின் விடயத்தில் அத்தகைய குழுவின் தலைவரும் அல்லது செயலாளரும், ஒரு பங்குடைமையின் விடயத்தில் முகாமைப் பங்காளரும் அல்லது முகாமையாளரையும் உள்ளடங்கலாக, எவரேனும் ஆளையும் உள்ளடக்கும்;

"கைத்தொழில் அல்லது சேவை " என்பது, -

(அ) ஏதேனும் வியாபாரம், தொழில், உற்பத்தி மற்றும் கமத்தொழில், வியாபாரம், தொழில், உற்பத்தி அல்லது கமத்தொழில் என்றவகை யாக ஏதேனும் பொறுப்புமுயற்சி மற்றும் வியாபாரம், தொழில், உற்பத்தி அல்லது கமத்தொழிலின் ஏதேனும் கிளை அல்லது பிரிவு என்பவற்றையும்;

(ஆ) வியாபார நோக்கங்களுக்காகவாயினுஞ்சரி அல்லது வேறுவகையாகவாயினுஞ்சரி, ஒரு பொறுப்பு முயற்சியைக் கொண்டுநடாத்துவதற் காக ஓர் உள்ளூரதிகாரசபையின் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஒரு கூட்டுத் தாபனத்தின் தொழிலிலுள்ள ஆட்களினால் புரியப்பட்ட எத்தகைய விவரணத்தினதுமான வேலை அல்லது ஊழியம் என்பவற்றையும்;

(இ) வேலையாட்களின் ஒவ்வொரு தான்புரி தொழில், வாழ்க்கைத்தொழில் அல்லது சேவை என்பவற்றையும்; அத்துடன்

(ஈ) தொழில்தருநர்களின் ஒவ்வொரு பொறுப்பு முயற்சியையும்,

உள்ளடக்கும், ஆனால் மானியக்கொடை அல்லது கடன் என்றவகையாக அல்லது வேறுவகையாக அரசாங்கத்தி னால் முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ வழங்கப்பட்ட நிதிகளுடன் அல்லது மூலதனத்துடன், பங்குமூலதனத்தின் பெரும்பான்மையை அரசாங்கம் வைத்திருக்குமிடத்து, ஏதேனும் எழுத்திலான சட்டத்தி னால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்படுகின்ற ஏதேனும் கூட்டுத்தாபனத்தினால், சபையினால் அல்லது வேறு குழுவினால் கொண்டு

*நடாத்தப்பட்ட ஏதேனும் கைத்தொழில், தொழில் அல்லது பொறுப்பு முயற்சியை அல்லது 1972 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கருத்துக்குட்பட்ட ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட சங்கத்தை உள்ளடக்காது;*

*"வேதனம் அல்லது சம்பளம்" என்பது-*

*(அ) வேலையாளின் ஒப்பந்தமுறையிலான வேதனம் அல்லது சம்பளம் அல்லது வேலையாள் எந்தக் கைத்தொழிலை அல்லது சேவையைச் சேர்ந் துள்ளாரோ அந்தக் கைத்தொழிலுக்கு அல்லது சேவைக்கு 136 ஆம் அத்தியாயமான சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதித்து ரைக்கப்பட்ட வேதனம்; அத்துடன்*

*(ஆ) வாழ்க்கை செலவுப்படி, விசேட வாழ்க்கைப் படி அல்லது வேறேதேனும் ஒத்தபடி என்பவற் றுடன் சேர்த்து வேதனம் அல்லது அடிப் படைச் சம்பளம்,*

*என்று பொருளாகும்;*

*"வேலையாள்" என்பது, ஒப்பந்தமானது வெளிப்படையான தாக அல்லது உட்கிடையானதாக, வாய்மொழிமூல மானதாக அல்லது எழுத்திலானதாக இருப்பினுஞ்சரி, அத்துடன் அது ஒரு சேவை ஒப்பந்தமாக அல்லது 1990ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்விச் சட்டத்தின்கீழ் அத்துடன் 1978 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, பயிற்சி பெறுநர்களை ஊழியத்தில் அமர்த்துதல் (தனியார்துறை) சட்டத்தின்கீழ் மேவப்பட்ட தொழிற்பயிற்சி ஒப்பந்த மொன்று நீங்கலாக தொழிற்பயிற்சி ஒப்பந்தமாக, தொழிற்பயிற்சி அல்லது ஏதேனும் வேலையை அல்லது ஊழியத்தைத்தாமே நேரடியாக நிறைவேற்றுவதற்*

கான ஒப்பந்தமாக இருப்பினுஞ்சரி, தொழில்தருநரொரு வருடன் ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டுள்ள ஓர் ஒப்பந்தத்தின்கீழ் அல்லது அவருடன் எத்தன்மையிலும் வேலை செய்கின்ற எவரேனுமாள் என்று பொருளாகு மென்பதுடன், எவரேனுமாள் குறிப்பிட்ட ஏதேனும் நேரத்தில் தொழிலில் இருப்பினுஞ்சரி அல்லது இல்லாவிடினுஞ்சரி, அத்தகைய ஏதேனும் ஒப்பந்தத் தின்கீழ் சாதாரணமாகத் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள அத்தகைய ஆளையும் உள்ளடக்கும்; அத்துடன் எந்த ஆளின் சேவைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளனவோ அந்த எவரேனுமாளையும் உள்ளடக்கும்; ஆனால் வீட்டு வேலையாளரொருவரை உள்ளடக்கமாட்டாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**15**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்